www.padippakam.com

அமரர்

## சபாரெட்ணம் - சபாலிங்கம் அவர்கள்

01-05-1994 அன்று பரிசில் அகால மரணமடைந்தமை குறித்த

# கண்ணீர் அஞ்சலி



**பிறப்பு**
14 • 01 • 1952

**இறப்பு**
01 • 05 • 1994

நீ மனைவியையும், மகனையும் விட
மனிதத்தை நேசித்தவன்!.......
அதனால்தான் மரணம் உனக்குப் பரிசானது!.....
சொந்த மண்ணைத்துறந்து
வந்த மண்ணில்கூட உன்னை
வாழவிடவில்லை இந்த மிருகங்கள்!.......
ஐந்தறிவு மிருகங்களுக்கு
அன்பு பற்றியும், அகிம்சை பற்றியும்
எங்கே தெரியப்போகிறது .......
மனித உயிர்களை மலிவாக நினைப்பவர்களிடம்
மனித நேயத்தை எப்படி நீ எதிர்பார்த்தாய்?...
குறிவைக்க வேண்டிய குற்றவாளிகள்
சுதந்திரமாகச் சுற்றித்திரிய
நிஜங்களை வெளிக்கொணர நினைத்த உனக்கு
பரிசு துப்பாக்கிக் குண்டுகள்!
நாட்டை நேசித்ததால் அன்று சித்திரவதை மட்டுமே!
இன்று நாட்டில் உலவும் காட்டு மிருகங்களால்
நரித்தனமாக நீ கொல்லப்பட்டாய்!.....
உதவி என்று கேட்டுவந்தவர்களுக்கு
உதவுபவருக்கு உயிர்ப்பலிதான் பரிசா?...
ஏ!.. தமிழினமே!...
வந்த இடத்தில்கூட வாழவிடாத கயவர்களை
என்ன செய்வதாக உத்தேசம்?....
சொந்த மண்ணில் எம்மவர் சிந்தும்
குருதி வெள்ளம் போதும்!...
இந்த மண்ணிலும் இது தேவையா?....
இன்று நீ சிந்திய குருதியின் பின்னாவது
**சிந்திப்போம்!.... சிந்திப்போம்!.....**

இவ்வண்ணம்
கண்ணீர் அஞ்சலியுடன்
**கனடா நண்பர்கள்**
06-05-1994

படிப்பகம்